# வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## TNPSC
## நடப்பு நிகழ்வுகள்

(A book for TNPSC Examination)

**மார்ச் 2024**

Since 2011

An ISO 9001: 2015 Institution | Providing Excellence Since 2011

**Head Office**

Old No. 52, New No. 1, 9th Street,
F Block, 1st Avenue Main Road, (Near Istha Siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600 102.
Phone: 044-2626 5326 | 98844 21666 | 98844 32666

Branches

**SALEM**
No. 189/1, Meyanoor Road,
Near ARRS Multiplex, (Near Salem New Bus Stand),
Opp. Venkateshwara Complex,
Salem - 636 004.
**Ph: 0427-2330307 | 95001 22022**

**KOVAI**
No. 347, D.S. Complex
(3rd floor), Nehru Street,
Near Gandhipuram Central Bus Stand, Ramnagar,
Kovai - 641 009.
**Ph: 75021 65390**

**MADURAI**
No. 199, Dharshini Tower,
1st Floor, Vaigai Colony,
Anna Nagar,
Madurai - 625 020.
**Ph: 91500 21999**
**91500 21998**

**TIRUNELVELI**
No. 58, IVY Towers, 3rd Floor,
Palayamkottai,
Near Palai Bus Stand,
(Next to Muthamil Hospital),
Tirunelveli - 627 002.
**Ph: 91500 10079**

**THANJAVUR**
Muthu Complex,
(Pantaloons Showroom Basement)
No. 243, Cauvery Nagar,
Opp. New Housing Unit,
Thanjavur - 613 005.
**Ph: 78711 69099 | 78715 71819**

**KOVILPATTI**
No. 15, Kathiresan Kovil Road,
Behind Kaliamman Temple,
Kovilpatti – 628 501.
**Ph: 90037 90335**
**81222 80685**

**THIRUCHENGODE**
Vivekananda Educational Institutions
Elayampalayam (Po),
Thiruchengode (Tk),
Namakkal (Dt) - 637205.
**Ph: 7845779908**

www. vetriias. com

# முகவுரை

## இயக்குநர் வாழ்த்து மடல்

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.**



**மு.சண்முகம்**

நிறுவனர்

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

பொருள்:

ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்த படியே செயல்புரிவதில் உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிப்பணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுப்படுத்தும் வகையில் நடத்தப்படும் அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

மு.சண்முகம்
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ் பயிற்சி நிறுவனம்

வெளியீட்டாளர்

வெற்றி சண்முகம் பப்ளிகேஷன்

எஃப்–பிளாக், புதிய எண். 1, 3–வது மாடி, 9–வது தெரு, 1–வது அவன்யூ பிராதான சாலை,

சிந்தாமணி, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை–600 102.

தொலைபேசி: 044–26265326

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்




வரலாறு 01




10 அரசியல் அறிவியல்



புவியியல் 15



17 பொருளாதாரம்



அறிவியல் 20

தினசரி
தேசிய நிகழ்வு 22








25 சர்வதேச நிகழ்வு

தமிழ்நாடு 26



# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **மார்ச் 1** | **உலக கடற்புல் தினம்** | ▪ கடற்புல் மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்பில் அதன் முக்கிய செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் **மார்ச் 1 ஆம் தேதி** உலக கடற்புல் தினம் கொண்டாடப்படுகிறது.<br>▪ **கருப்பொருள் 2024:** Healthy seagrass, healthy planet |
| **மார்ச் 1** | **பூஜ்ஜிய பாகுபாடு தினம்** | ▪ உலகம் முழுவதும் சமத்துவம், உள்ளடக்கம் மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1 அன்று பூஜ்ஜிய பாகுபாடு தினம் கொண்டாடப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருத்துரு: To protect every–one's health, protect everyone's rights என்பதாகும்.<br>▪ இந்த நாள் முதலில் **மார்ச் 1, 2014** அன்று கொண்டாடப்பட்டது. |
| **மார்ச் 3** | **உலக வனவிலங்கு தினம்** | ▪ வனவிலங்கு பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் **உலக வனவிலங்கு தினம் மார்ச் 3 அன்று** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : "Connecting People and Planet: Exploring Digital Innovation in Wildlife Conservation" என்பதாகும்.<br>▪ இந்த நாள் முதன்முதலில் மார்ச் 3, 2014 இல் அனுசரிக்கப்பட்டது. |
| **மார்ச் 4** | **தேசிய பாதுகாப்பு தினம்** | ▪ பல்வேறு துறைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் **மார்ச் 4 அன்று தேசிய பாதுகாப்பு தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள்: Safety Leadership for Environmental, Social and Governance (ESG) Excellence என்பதாகும். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **மார்ச் 4** | **உலக உடல் பருமன் தினம்** | ▪ உடல் பருமன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 4ஆம் தேதி உலக உடல் பருமன் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள்: 'Let's Talk About Obesity And...' என்பதாகும் |
| **மார்ச் 7** | **ஜன் ஔஷாதி திவாஸ்** | ▪ ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 7 அன்று **ஜன் ஔஷாதி திவாஸ்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ ஜன் ஔஷாதி திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பொதுவான மருந்துகளின் பயன்பாட்டை ஊக்கப்படுத்தவும் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>குறிப்பு<br>▪ பொது மருந்துகளை மலிவு விலையில் வழங்குவதற்காக **நவம்பர் 2008** இல் ரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்துத் துறையால் பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷாதி பரியோஜனா (PMBJP) தொடங்கப்பட்டது. |
| **மார்ச் 8** | **சர்வதேச மகளிர் தினம்** | ▪ பாலின சமத்துவம், பெண்களின் இனப்பெருக்க உரிமைகள், பாலின வன்முறை, பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள், பெண்கள் கல்வி போன்ற பெண்கள் தொடர்பான பல பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 அன்று சர்வதேச மகளிர் தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள்: "Invest in Women: Accelerating Progress" என்பதாகும்<br>▪ இந்த தினம் 1975 இல் ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டாடப்படுகிறது. |
| **மார்ச் 10** | **CISFன் 55வது நிறுவன தினம்** | ▪ 1969 இல் மத்திய தொழில்துறை பாதுகாப்புப்படை (CISF) நிறுவப்பட்டதன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 10 அன்று CISFன் **நிறுவன தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ CISF என்பது ஒரு துணை ராணுவப் பாதுகாப்புப் படை அமைப்பாகும்.<br>▪ இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 15 | உலக நுகர்வோர் உரிமைகள் தினம் | ▪ மோசடி, பாகுபாடு மற்றும் இதுபோன்ற பிற நடைமுறைகளுக்கு எதிராக அனைத்து நுகர்வோரின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15 அன்று உலக நுகர்வோர் உரிமைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள்: 'Fair and Responsible AI for Consumers' என்பதாகும்.<br>▪ முதல் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் 1983 இல் கொண்டாடப்பட்டது. |
| மார்ச் 16 | தேசிய தடுப்பூசி தினம் | ▪ மனித ஆரோக்கியத்திற்கான தடுப்பூசிகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக **மார்ச் 16** அன்று **தேசிய தடுப்பூசி தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ **2024ம் ஆண்டிற்கான கருப்பொருள்** : Vaccines Work For All என்பதாகும்.<br>▪ 1995 ஆம் ஆண்டில் இந்தியாவில் போலியோ தடுப்பூசியின் முதல் தவணை செலுத்தப்பட்டதை சிறப்பிக்கும் விதமாக தேசிய தடுப்பூசி தினம் முதன்முதலில் கொண்டாடப்பட்டது |
| மார்ச் 21 | சர்வதேச காடுகள் தினம் | ▪ மனிதகுலம் மற்றும் அதன் கிரகத்தின் உயிர்வாழ்விற்காக காடுகள் மற்றும் மரங்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21 அன்று சர்வதேச காடுகள் தினம் கொண்டாடப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டுக்கான கருப்பொருள் : Forests and Innovation: New Solutions for a Better World என்பதாகும்<br>▪ இந்த தினம் முதன்முதலில் 2012 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் கொண்டாடப்பட்டது. |
| மார்ச் 21 | உலக டவுன் சிண்ட்ரோம் தினம் | ▪ டவுன் சிண்ட்ரோம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21 அன்று உலக டவுன் சிண்ட்ரோம் தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டுக்கான கருப்பொருள் : 'End The Stereotypes' என்பதாகும்.<br>▪ இந்த தினம் 2012 முதல் ஐக்கிய நாடுகள் சபையால் அதிகாரப்பூர்வமாக கடைபிடிக்கப்படுகிறது |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **மார்ச் 22** | **உலக தண்ணீர் தினம்** | ▪ தண்ணீரின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22ஆம் தேதி **உலக தண்ணீர் தினம்** கொண்டாடப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டுக்கான கருப்பொருள்: Leveraging Water for Peace என்பதாகும்.<br>▪ இந்த தினம் முதன்முதலில் 1993 இல் கொண்டாடப்பட்டது. |
| **மார்ச் 23** | **உலக வானிலை தினம்** | ▪ **உலக வானிலை தினம்** ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 23 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ உலக வானிலை அமைப்பு (WMO) நிறுவப்பட்டதை நினைவுகூரும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருப்பொருள் : At the Front–line of Climate Action என்பதாகும் |
| **மார்ச் 24** | **உலக காசநோய் தினம்** | ▪ காசநோயின் (TB) பேரழிவு தரும் உடல்நலம், சமூக மற்றும் பொருளாதார விளைவுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் **உலக காசநோய் தினம் மார்ச் 24** அன்று கொண்டாடப்படுகிறது.<br>▪ 2024ன் ஆண்டுக்கான கருப்பொருள்: "Yes! We can end TB" என்பதாகும்.<br>▪ இந்த தினம் காசநோயை ஏற்படுத்தும் **மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ்** பாக்டீரியாவை டாக்டர் ராபர்ட் கோச் 1882 ஆம் ஆண்டில் கண்டுபிடித்ததன் நினைவாக கொண்டாடப்படுகிறது |
| **மார்ச் 25** | **புவி நேரம் 2024** | ▪ 2024 இல் புவி நேரம் மார்ச் 25 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ புவி நேரம் என்பது 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இயற்கைக்கான உலக வனவிலங்கு நிதியத்தின் (WWF) வருடாந்திர முன்முயற்சியாகும்.<br>▪ 180க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களை 1 மணிநேரம் வரை மின் விளக்குகளை அணைக்க ஊக்குவிக்கிறது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 27 | **உலக நாடக தினம்** | ▪ உலகம் முழுவதும் அனைத்து வடிவங்களிலும் நாடகத்தை மேம்படுத்துவதற்காக உலக நாடக தினம் ஆண்டுதோறும் மார்ச் 27 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ சர்வதேச நாடக நிறுவனம் (ITI) மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கான உலக அமைப்பு ஆகியவற்றால் ஆண்டுதோறும் இந்த தினம் கொண்டாடப்படுகிறது. |
| மார்ச் 30 | **சர்வதேச கழிவுகள் அற்ற தினம்** | ▪ கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை பரப்புவதற்காக ஆண்டுதோறும் மார்ச் 30 அன்று உலகம் முழுவதும் சர்வதேச கழிவுகள் அற்ற தினமாக அனுசரிக்கப்படுகிறது.<br>▪ UN சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) மற்றும் UN மனித குடியேற்றத் திட்ட அமைப்பு (UN–Habitat) ஆகியவற்றால் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த நாள் முதன்முதலில் 2023 இல் அனுசரிக்கப்பட்டது. |

# 1.2 பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## ஐஎன்எஸ் ஜடாயு

- இந்திய கடற்படை இரண்டாவது கடற்படை தளமான ஐஎன்எஸ் ஜடாயுவை லட்சத்தீவுகளில் உள்ள மினிக்காய் தீவில் இயக்கியது.
- 2012 இல் இயக்கப்பட்ட முதல் கடற்படை தளம் கவராத்தியில் உள்ள ஐஎன்எஸ் வீப்ராக்ஷக் ஆகும்.
- இது ஒன்பது டிகிரி கால்வாய்க்கு அருகில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள தளமாகும்.
- ஒன்பது டிகிரி கால்வாய் மினிக்காய் தீவையும் லட்சத்தீவையும் பிரிக்கிறது.

## அதிதி திட்டம் (ADITI)

- iDEX உடன் கூடிய புதுமையான தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான திட்டத்தை (ADITI) பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்.
- முக்கியமான மற்றும் மூலோபாய பாதுகாப்பு தொழில்நுட்பங்களில் புதுமைகளை ஊக்குவிப்பது, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான குறிப்பிடத்தக்க மானியங்களுடன் ஸ்டார்ட்–அப்களை ஊக்குவிப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது

## கடற்படை தளபதிகள் மாநாடு

- ஆண்டுக்கு இருமுறை நடைபெறும் **கடற்படைத் தளபதிகள் மாநாட்டில்** இந்த ஆண்டின் முதலாவது மாநாடு 2024 **புதுதில்லியில்** நடைபெற்றது.
- இந்த மாநாட்டில் முக்கியமான கடல்சார் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.
- இம்மாநாட்டின் தொடக்க அமர்வு விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ரமாதித்யாவில் நடைபெற்றது.

## நௌசேனா பவன்

- புதுடெல்லியில் இந்திய கடற்படையின் பிரத்யேக தலைமையகமான **நௌசேனா பவனை** பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.
- **இது இந்திய கடற்படையின் முதல் சுதந்திரமான தலைமையகமாகும்.**
- இது நவீன வசதிகள் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S. STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

### "லமிட்டியே பயிற்சி– 2024"

- "லமிட்டியே பயிற்சி– 2024" என்ற கூட்டு இராணுவப் பயிற்சியின் பத்தாவது பதிப்பு **செஷல்ஸுல்** தொடங்க உள்ளது.
- இது **இந்திய ராணுவம் மற்றும் செஷல்ஸ்** பாதுகாப்புப்படைகளுக்கு இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சியாகும்.

### புலி வெற்றிப் பயிற்சி – 24 (Ex Tiger Triumph – 24)

- புலி வெற்றிப் பயிற்சி என்பது **இந்தியா, அமெரிக்கா** இடையிலான இருதரப்பு முப்படை மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நீர்–நில பயிற்சியாகும்
- இது இந்தியக் கடற்படைக் கப்பல் **ஜலஷ்வாவில்** நடைபெற்றது.

### IMT முத்தரப்பு பயிற்சி – 2024

- IMT முத்தரப்பு பயிற்சியின் இரண்டாவது பதிப்பில் **இந்திய கடற்படை** பங்கேற்க உள்ளது.
- இது **இந்தியா, மொசாம்பிக், தான்சானியா** ஆகிய நாடுகள் பங்கேற்கும் முத்தரப்பு கடற்பயிற்சி ஆகும்.
- IMT முத்தரப்பு பயிற்சியின் முதல் பதிப்பு **அக்டோபர் 2022** இல் நடத்தப்பட்டது.

### 'ஆபரேஷன் சங்கல்ப்'

- **'ஆபரேஷன் சங்கல்ப்'** என்ற பெயரில் நடந்து வரும் கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் 100 நாட்களை 23 மார்ச் அன்று நிறைவு செய்தது.
- இந்திய கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கையாக **பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவில்** இந்திய கடற்படையால் **'ஆபரேஷன் சங்கல்ப்'** தொடங்கப்பட்டது

### LCA – Mk1A விமான சோதனை

- இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனமானது **முதல் உள்நாட்டு இலகுரக போர் விமானமான (LCA) தேஜஸ் மார்க் 1ஏ** விமானத்தின் சோதனையை பெங்களூரில் வெற்றிகரமாக முடித்தது.
- LCA – Mk1A என்பது தேஜஸின் மிகவும் மேம்பட்ட பதிப்பாகும்.

# 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### சர்வதேச பெரும் பூனை கூட்டமைப்பு (IBCA)

- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் **சர்வதேச பெரும் பூனை கூட்டமைப்பை** (IBCA) அமைத்து ஒருங்கிணைக்க திட்டமிட்டுள்ளது.
- சர்வதேச பெரும் பூனை கூட்டமைப்பின் (IBCA) தலைமையகம் **இந்தியாவில்** அமையவுள்ளது.
- இந்தியா ஏற்கனவே ஐந்து ஆண்டுகளுக்கு ₹150 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.
- இதுவரை 16 நாடுகள் **சர்வதேச பெரும் பூனை கூட்டமைப்பில்** (IBCA) இணைய எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளன

### 4 வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு ஸ்டார்ட்அப் மன்றம்

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) ஸ்டார்ட்அப் மன்றத்தின் நான்காவது பதிப்பு **புது தில்லியில்** நடைபெற்றது.
- இந்த முன்முயற்சி SCO உறுப்பு நாடுகளிடையே ஸ்டார்ட்அப் உறவுகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது.

SCO பற்றி

- **தொடக்கம்** – ஜூன் 15, 2001.
- இது சீனாவின் ஷாங்காய் நகரில் நிறுவப்பட்ட அரசுகளுக்கிடையேயான நிரந்தர சர்வதேச அமைப்பாகும். இதில் இந்தியா உட்பட 9 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

வெற்றி I.A.S. கல்வி மையம் Since 2011

# 1.4 புகழ்பெற்ற நபர்கள்

### லச்சித் போர்புகனின் வெண்கலச் சிலை

- அசாமின் ஜோர்கட் மாவட்டத்தில் **லச்சித் போர்புகனின் 125 அடி வெண்கலச் சிலை** அவரது நினைவிடத்தில் திறக்கப்பட்டது.
- இந்த சிலை 84 அடி உயரம் கொண்ட 41 அடி பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது, மேலும் இந்த சிலையின் மொத்த உயரம் 125 அடியாகும்.
- லச்சித் போர்புகன் அஹோம் இராச்சியத்தின் இராணுவத் தளபதி ஆவார்.

### மாற்றுத்திறனாளிகள் பிரிவில் தேசிய அடையாளம்

- மாற்றுத்திறனாளிகள் பிரிவில் தேசிய அடையாளமாக **ஷீத்தல் தேவியை** இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் சமீபத்தில் அறிவித்துள்ளது.
- அவர் ஒரு புகழ்பெற்ற பாரா வில்வித்தை விராங்கனை மற்றும் அர்ஜுனா விருது பெற்றவர் ஆவார்.

# 1.5 விளையாட்டு

### பாரிஸ் ஒலிம்பிக் 2024

- இந்திய ஒலிம்பிக் சங்கம் (IOA) டேபிள் டென்னிஸ் வீரர் **அச்சந்தா ஷரத் கமலை** இந்திய ஒலிம்பிக் குழுவின் கொடி ஏந்திச் செல்பவராக நியமித்துள்ளது.
- இந்திய ஒலிம்பிக் சங்கம் குத்துச்சண்டை வீராங்கனை **மேரி கோமை** இந்திய ஒலிம்பிக் குழுவின் ஒருங்கிணைப்பு குழு தலைவராக நியமித்துள்ளது.
- 2024 ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11, 2024 வரை பிரான்சின் பாரிஸில் நடைபெற உள்ளது.

# 1.6 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### சங்கீத நாடக அகாடமி விருதுகள்

- கலைத்துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு **2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான சங்கீத நாடக அகாடமி விருதுகளை** ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கினார்.
- மேலும் ஏழு சிறந்த கலைஞர்களுக்கு சங்கீத நாடக அகாடமி பெல்லோஷிப் விருது அல்லது அகாடமி ரத்னா விருதையும் வழங்கினார்.
- இது நிகழ்த்துகலையில் செய்த சிறப்பான பங்களிப்பிற்காக கலைஞர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவமாகும்.
- இவ்விருதுகள் முதன்முதலில் 1952 இல் வழங்கப்பட்டது.

### அவ்வையார் விருது 2024

- இலக்கியத் துறையில் சிறப்பாக தொண்டாற்றி வரும் **பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா** என்ற எழுத்தாளருக்கு 2024–ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இவர் எழுதிய **"கருக்கு"** என்ற புதினம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, 2000ஆம் ஆண்டின் **'கிராஸ் வேர்ட்புக்'** விருதை பெற்றுள்ளது
- இந்த விருது 2012 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவால் சர்வதேச மகளிர் தினத்தைக் குறிக்கும் வகையில் நிறுவப்பட்டது.
- சமூக சீர்திருத்தங்கள், பெண்கள் மேம்பாடு, மத நல்லிணக்கம், கலை, அறிவியல், கலாச்சாரம், பத்திரிகை மற்றும் நிர்வாகம் போன்றவற்றில் சிறந்து விளங்கும் பெண்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

### தேசிய படைப்பாளிகள் விருது

- இணையதள உள்ளடக்கத்தை உருவாக்கு பவர்களுக்கு புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

படைப்பாளிகள் விருதை பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார்.

- மூன்று சர்வதேச படைப்பாளிகளையும் உட்பட 23 **படைப்பாளிகளுக்கு** இவ்விருது வழங்கப்பட்டது.
- சிறந்த கதைசொல்லிக்கான விருதை **தமிழகத்தைச் சேர்ந்த கீர்த்திகா கோவிந்தசாமி** பெற்றார்

## ஆஸ்கார் விருதுகள் 2024

- 96வது அகாடமி விருதுகள் விழா லாஸ் ஏஞ்சல்ஸில் வழங்கப்பட்டது
- **முக்கியமான விருதாளர்கள்**
    - **சிறந்த நடிகர்:** சில்லியன் மர்பி, "ஓப்பன்ஹைமர்"
    - **சிறந்த நடிகை:** எம்மா ஸ்டோன், "புவர் திங்ஸ்"
    - **சிறந்த படம்:** ஓப்பன்ஹைமர்
    - **சிறந்த இயக்குனர்:** கிறிஸ்டோபர் நோலன், "ஓப்பன்ஹைமர்"
    - **சிறந்த இசை:** "ஓப்பன்ஹைமர்"
- முதல் ஆஸ்கார் அகாடமி விருதுகள் வழங்கும் நிகழ்வு மே 16, 1929 அன்று நடைபெற்றது.

## சாகித்ய அகாடமி மொழி பெயர்ப்புக்கான விருது 2023

- 2023 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி மொழி பெயர்ப்புக்கான விருதுக்கு எழுத்தாளர் "**கண்ணையன் தக்ஷிணாமூர்த்தியின் 'கருங்குன்றம்**" என்ற புத்தகம் தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- மமாங் தாயின் ஆங்கில நாவலான '**தி பிளாக் ஹில்**' என்ற புத்தகத்தை கண்ணையன் தக்ஷிணாமூர்த்தி தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## 'ஆர்டர் ஆஃப் தி ட்ருக் கியால்போ' விருது

- நரேந்திர மோடிக்கு பூடானின் உயரிய கௌரவமான '**ஆர்டர் ஆஃப் தி ட்ருக் கியால்போ**' விருது வழங்கப்பட்டது.
- இந்த மதிப்புமிக்க விருதைப் பெறும் **முதல் வெளிநாட்டுத் தலைவர்** மோடி ஆவார்.
- இந்த விருதானது **இந்தியா–பூடான் நட்புறவை** வலுப்படுத்தும் நரேந்திர மோடியின் பங்களிப்பையும், மக்களை மையமாகக் கொண்ட தலைமைத்துவத்தையும் அங்கீகரிக்கிறது

## மெட்ராஸ் மியூசிக் அகாடமி விருதுகள் 2024

- **மெட்ராஸ் மியூசிக் அகாடமி டி.எம்.கிருஷ்ணாவுக்கு 2024ம் ஆண்டுக்கான சங்கீத கலாநிதி விருதை** வழங்கியது.
- இது கர்நாடக இசைத்துறையில் உயரிய விருதாகக் கருதப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான **நிருத்ய கலாநிதி விருது டாக்டர் நீனா பிரசாத்துக்கு** வழங்கப்பட்டது.

## ஏபெல் பரிசு

- 2024 ஆம் ஆண்டிற்கான ஏபெல் பரிசு சமீபத்தில் பிரெஞ்சு கணிதவியலாளர் **மைக்கேல் தலகிராண்டிற்கு** வழங்கப்பட்டது.
- இவ்விருது கணிதத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய அறிஞர்களுக்கு வழங்கப்படுகிறது.
- இவ்விருது 2003 முதல் வழங்கப்படுகிறது

## பாரத ரத்னா 2024

- **ஜனாதிபதி திரௌபதி முர்மு** 2024 ஆம் ஆண்டிற்கான பாரத ரத்னா விருதை ஐந்து நபர்களுக்கு வழங்கினார்.
    - **பி.வி. நரசிம்ம ராவ்**
    - **பி. சௌத்ரி சரண் சிங்**
    - **கர்பூரி தாக்கூர்**
    - **டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்**
    - **எல்.கே.அத்வானி**
- ஜனாதிபதி மாளிகையில் நடந்த விழாவில் எல். கே. அத்வானியைத் தவிர்த்து நான்கு விருதுகள் இறப்பிற்கு பின் வழங்கப்பட்டன.

குறிப்பு

- பாரத ரத்னா இந்திய குடிமகனுக்கு வழங்கப்படும் **இந்தியாவின் உயரிய விருதாகும்.**
- நிறுவப்பட்ட ஆண்டு – 1954
- இலக்கியம், அறிவியல் மற்றும் கலை போன்ற துறைகளில் ஆற்றும் சேவைக்காக இவ்விருந்து வழங்கப்படுகிறது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 1.7 நியமனங்கள்

## அருண் கோயல் ராஜினாமா

- தேர்தல் ஆணையர் **அருண் கோயல்** சமீபத்தில் தனது பதவியை ராஜினாமா செய்தார்.
- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) **மூன்று உறுப்பினர்களைக்** கொண்டுள்ளது.
- ஏற்கனவே ஒரு தேர்தல் ஆணையர் பதவி காலியாக இருந்த நிலையில் தற்போது தலைமைத் தேர்தல் ஆணையர் **ராஜீவ் குமார்** மட்டுமே பதவியில் இருக்கிறார்.
- **தேர்தல் ஆணையர் தேர்வுக்குழு**
    - பிரதமர் (தலைவர்)
    - பிரதமரால் பரிந்துரைக்கப்பட்ட மத்திய கேபினெட் அமைச்சர்
    - மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்
- பின்னர் இவர் இந்திய **ஜனாதிபதியால்** நியமிக்கப்படுகிறார்.
- **பிரிவு 324** – தேர்தல் ஆணையத்தின் தேர்தல் கண்காணிப்பு, வழிநடத்துதல் மற்றும் கட்டுப்பாடு

## தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர்

- தமிழ்நாட்டின் புதிய மாநில தேர்தல் ஆணையராக பி.ஜோதி நிர்மலாசாமி சமீபத்தில் நியமிக்கப்பட்டார்.
- ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநில தேர்தல் ஆணையத்தை அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாக நிறுவ 243 K மற்றும் பிரிவு 243 ZA ஆகிய விதிகள் 73&74வது சட்டதிருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டன

## புதிய ஹரியானா முதல்வர்

- சமீபத்தில் ஹரியானாவின் புதிய முதல்வராக **நயாப் சிங் சைனி** பதவியேற்றார்.
- நயாப் சிங் சைனிக்கு ஹரியானா ஆளுநர் பண்டாரு தத்தாத்ரேயா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்

## புதிய தேர்தல் ஆணையர்கள்

- ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரிகளான **ஞானேஷ் குமார்** மற்றும் **சுக்பீர் சிங் சந்து** ஆகியோர் புதிய தேர்தல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், சேவை நிபந்தனைகள் மற்றும் பதவிக்காலம்) சட்டம் 2023–ன் படி தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

## கிரேட் இந்தியன் பஸ்டர்ட் பாதுகாப்பிற்கான குழு

- கிரேட் இந்தியன் பஸ்டர்ட் (GIB) எனும் பறவை இனத்தை பாதுகாப்பிற்காக **ஏழு பேர் கொண்ட** நிபுணர் குழுவை உச்ச நீதிமன்றம் சமீபத்தில் நியமித்துள்ளது.
- IUCN நிலையின் படி இப்பறவை இனம் ஆபத்தான நிலையில் உள்ளது.

## NIPன் புதிய இயக்குநர் ஜெனரல்

- தேசிய புலனாய்வு அமைப்பின் (NIA) தலைமை இயக்குநராக **சதானந்த் வசந்த் டேட்–ஐ** சமீபத்தில் மத்திய அரசு நியமித்துள்ளது.
- இவர் அமைச்சரவையின் நியமனக் குழுவால் (ACC) நியமிக்கப்பட்டார்.
- ACC ஆனது இந்தியப் பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோரைக் கொண்டது.




## 2.1 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

### புதிய விமான ஓடுதளம்

- பிரதமர் மோடி மற்றும் மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத் ஆகியோர் **மொரீஷியஸின் அகலேகா தீவில் புதிய விமான ஓடுதளம்** மற்றும் 6 சமூக மேம்பாட்டு திட்டங்களை கூட்டாக தொடங்கி வைத்தனர்.
- அகலேகா இரண்டு தீவுகளை உள்ளடக்கியது – முக்கிய வடக்கு தீவு, மற்றும் சிறிய தெற்கு தீவு.

### இந்தியா – EFTA கூட்டமைப்பு

- ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்துடன் (EFTA) நீண்ட காலமாக பேச்சுவார்த்தையில் உள்ள **சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா** கையெழுத்திட வாய்ப்புள்ளது.
- EFTA நான்கு ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கியுள்ளது. அவை, **சுவிட்சர்லாந்து, பின்லாந்து, நார்வே மற்றும் லிச்சென்ஸ்டைன்.**
- முன்மொழியப்பட்ட இந்தியா–EFTA வர்த்தக மற்றும் பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (TEPA) $100 பில்லியன் மதிப்புள்ள முதலீடுகளை இந்தியாவிற்கு கொண்டு வந்து ஒரு மில்லியன் வேலைகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (TEPA)

- இந்தியா சமீபத்தில் ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்துடன் (EFTA) சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் (FTA) கையெழுத்திட்டது.
- EFTA நான்கு ஐரோப்பிய நாடுகளை **உள்ளடக்கியது** – சுவிட்சர்லாந்து, பின்லாந்து, நார்வே மற்றும் லிச்சென்ஸ்டைன்.
- TEPA ஆனது 15 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் $100 பில்லியன் முதலீடுகளையும் ஒரு மில்லியன் வேலை வாய்ப்புகளையும் எட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய அரபு எமிரேட்ஸுடனான இந்தியாவின் இவ்வகையான FTA ஒப்பந்தத்திற்குப் பிறகு கையெழுத்திடப்பட்ட இரண்டாவது ஒப்பந்தம் இதுவாகும்.

### இந்தியா–பூடான்

- 2019–2024 வரையிலான காலகட்டத்தில் பூடானிற்கு வழங்கப்பட்டு வந்த **₹5,000 கோடி உதவித்தொகையை** அடுத்த **ஐந்து ஆண்டுகளில் ₹10,000 கோடியாக** இரட்டிப்பாக்கி 2029 வரை வழங்க இந்தியா முடிவு செய்துள்ளது.
- பூட்டானின் **'கெலேபு மைண்ட்ஃபுல்னஸ் சிட்டி'** திட்டத்திற்கு இந்தியா ஆதரவு அளிக்கிறது

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 2.2 சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்

### JMM லஞ்ச வழக்கின் தீர்ப்பு – உச்சநீதிமன்றம் ரத்து

- நாடாளுமன்றம் சட்டப்பேரவைகளில் வாக்களிக்கவோ அல்லது குறிப்பிட்ட விஷயத்தை பேசவோ உறுப்பினர்கள் லஞ்சம் பெறுவது குற்றமாகும் எனவே **குற்றவியல் விசாரணையில் இருந்து அவர்களுக்கு சட்ட பாதுகாப்பு கிடையாது** என்று உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பளித்தது.
- 1998 ஆம் ஆண்டின் ஜேஎம்எம் லஞ்ச வழக்கின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது, இது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கு விலக்கு அளித்தது.
- லஞ்சத்தொகை ஏற்றுக்கொள்ளப்படும் தருணத்தில் லஞ்சம் முழுமையடைந்து விடுவதாக இந்திய தலைமை நீதிபதி D.Y. சந்திரசூட் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

# 2.3 பொது விழிப்புணர்வு மற்றும் பொதுக் கருத்து

### உர மானியத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- பாஸ்பேட் மற்றும் பொட்டாசிய (P&K) **உரங்களுக்கு காரிஃப் பருவம் 2024க்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய (NBS)** விகிதங்களை நிர்ணயிப்பதற்கான உரத்துறையின் முன்மொழிவுக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- NBS திட்டத்தின் கீழ் **மூன்று புதிய உர தரங்கள்** சேர்க்கப்பட்டுள்ளன.
- இதற்கான 2024 காரிஃப் பருவத்திற்கு பட்ஜெட் ஒதுக்கீடு சுமார் ரூ.24,420 கோடி ஆகும்.

### முத்தரப்பு ஒப்பந்தம்

- சமீபத்தில் **மத்திய அரசு, திரிபுரா அரசு மற்றும் திப்ராஹா பழங்குடியின முற்போக்கு பிராந்தியக் கூட்டணி** (TIPRA) ஆகியவை முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- திரிபுராவின் மக்கள்தொகையில் 33% உள்ள பழங்குடியின மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

### மாநிலங்களவை உறுப்பினராக சுதா மூர்த்தி நியமனம்

- கன்னடம், ஆங்கில மொழி எழுத்தாளர் மற்றும் சமூகப்பணி, தொண்டில் சிறந்து விளங்கும் **சுதாமூர்த்தி** குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவால் மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 80(3) பிரிவின்படி, கலை, அறிவியல், இலக்கியம் அல்லது சமூக சேவை ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்களை குடியரசுத் தலைவர் மாநிலங்களவைக்கு நியமிக்கலாம்.

### குடியுரிமை (திருத்தம்) விதிகள், 2024

- சமீபத்தில் மத்திய உள்துறை அமைச்சகம் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கான (CAA) விதிகளை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டது.
- குடியுரிமை (திருத்தம்) விதிகள், 2024, குடியுரிமை விதிகள், 2009 ஐ திருத்துகிறது மேலும் **குடியுரிமை திருத்தச் சட்டம்** (CAA), 2019 ஐ அமல்படுத்த முயலுகிறது.
- இது CAA, 2019 இன் கீழ் தகுதியான நபர்கள் இந்திய குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்க உதவும்.

- குடியுரிமை திருத்தச் சட்டம் (CAA), 2019 முஸ்லிம் அல்லாத துன்புறுத்தப்பட்ட **சிறுபான்மையினருக்கு இந்திய குடியுரிமை வழங்குவதை** நோக்கமாகக் கொண்டுள்ளது.
- டிசம்பர் 31, 2014க்கு முன் இந்தியாவிற்கு வந்த **வங்காளதேசம், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்கள்.**
- இச்சட்டத்தின் மூலம் இந்தியக் குடியுரிமை பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

## பொது சிவில் சட்டமசோதா, 2024

- ஜனாதிபதி திரௌபதி முர்மு சமீபத்தில் **பொது சிவில் சட்டமசோதா, 2024** க்கு ஒப்புதல் அளித்தார்.
- இதன் மூலம் சுதந்திர இந்தியாவில் ஒரே மாதிரியான பொது சிவில் சட்டத்தைக் இயற்றிய முதல் மாநிலம் **உத்தரகாண்ட்** ஆனது.
- இந்திய அரசியலமைப்பின் **201 வது பிரிவின் கீழ்** ஜனாதிபதி மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தார்.
- இந்த மசோதா ஏழு அட்டவணைகளின் கீழ் 392 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

## ஒரு நாடு ஒரே தேர்தல் பற்றிய அறிக்கை

- முன்னாள் குடியரசுத் தலைவர் **ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழு, 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டம்** குறித்த விரிவான அறிக்கையை ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் சமர்ப்பித்தது.
- ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதை மீட்டெடுக்க சட்டப்பூர்வமான உறுதியான வழிமுறையை மத்திய அரசு உருவாக்க வேண்டும் என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பாதுகாக்கப்பட்ட யானைகள் (இடமாற்றம் அல்லது போக்குவரத்து) விதிகள், 2024

- பாதுகாக்கப்பட்ட யானைகள் (இடமாற்றம் அல்லது போக்குவரத்து) விதிகள், 2024 எனப்படும் விதிகளின் தொகுப்பை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- யானைகளை மாநிலங்களுக்குள் அல்லது மாநிலங்களுக்கு இடையில் பரிமாற்றக்கூடிய நிபந்தனைகளை இந்த விதிகள் தாராள மயமாக்குகின்றன.

## நெகிழிக் கழிவு மேலாண்மை (திருத்த) விதிகள், 2024

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், **நெகிழிக் கழிவு மேலாண்மை (PWM) விதிகள்,** 2016ஐத் திருத்துவதற்கு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் கீழ் விதிகளை சமீபத்தில் அறிவித்தது.
- இது நெகிழி பேக்கேஜிங் மற்றும் மக்கும் நெகிழி அல்லது மக்கும் நெகிழியிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான விதிகளை திருத்துகின்றன.

## மின் வாகனக் கொள்கை 2024

- இந்தியாவை மின்சார வாகனங்களுக்கான உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக கேபினட் அமைச்சரவை சமீபத்தில் **மின் வாகனக்கொள்கைக்கு** ஒப்புதல் அளித்தது.
- இக்கொள்கையானது இந்தியாவை உற்பத்தி செய்யும் இடமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இக்கொள்கையின் மூலம் சமீபத்திய தொழில்நுட்பத்துடன் கூடிய மின் வாகனங்களை (EV) உற்பத்தி செய்ய முடியும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 2.4 மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசு திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

## பிரதமரின் இலவச மின்சார திட்டம்

- பிரதமரின் சூரிய வீடு இலவச மின்சார திட்டத்திற்கு (பிரதமர் சூர்யா கர் முஃப்ட் பிஜிலி யோஜனா) மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது.
- ஒரு கோடி வீடுகளின் கூரையில் சூரிய தகடுகளை ரூ.75,021 கோடி மதிப்பீட்டில் அமைப்பதன் மூலம் **ஒவ்வொரு மாதமும் 300 யூனிட்டுகள் வரை இலவச மின்சாரம்** வழங்குவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

## பிரதான் மந்திரி அனுசுசித் ஜாதி அபியுதாய் யோஜனா (PM–AJAY)

- **PM–AJAY திட்டத்தின் கீழ்** பல்வேறு மாநிலங்களில் 34 குடியிருப்பு விடுதிகளுக்கு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் அடிக்கல் நாட்டியது.
- இத்திட்டம் சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய சமூகங்களுக்கு உகந்த கற்றல் சூழலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PM–AJAY என்பது **மூன்று மத்திய நிதியுதவி** திட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமாகும். அவை,
  - பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா (PMAGY)
  - பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு சிறப்பு மத்திய உதவித் திட்டம் (SCA முதல் SCSP வரை)
  - பாபு ஜக்ஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா (BJR–CY)

## நாட்டுக்கான எனது முதல் வாக்கு பிரச்சாரம்

- சமீபத்தில் கல்வி அமைச்சகம், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சகம் ஆகியவை இணைந்து **"மேரா பெஹ்லா வோட் தேஷ் கே லியே (நாட்டுக்கான எனது முதல் வாக்கு)"** என்ற நாடு தழுவிய விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கியுள்ளன.
- 2024 மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள் பங்கேற்பை ஊக்குவிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான ஒருங்கிணைந்த அமைப்பு

- நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான (UCB) ஒரு ஒருங்கிணைந்த அமைப்பான **தேசிய நகர்ப்புற கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தை** (NUCFDC) மத்திய கூட்டுறவு அமைச்சர் அமித் ஷா துவக்கி வைத்தார்.
- ₹5 லட்சம் கோடி வைப்புத்தொகை மற்றும் மொத்தம் ₹3.50 லட்சம் கோடி கடன்களைக் கொண்ட இந்த அமைப்பு 1,500 வங்கிகளுடன் 11,000 கிளைகளைக் கொண்டுள்ளது.

## V–SAT நிலையங்கள்

- பழங்குடியினர் விவகார அமைச்சகம் **இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன்** (ISRO) இணைந்து **V–SAT (மிகச் சிறிய துளை முனையம்)** நிலையங்களை நிலைநிறுத்த திட்டமிட்டுள்ளது.
- V–SAT நிலையங்கள் ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், ஒடிசா மற்றும் மகாராஷ்டிராவில் உள்ள சுமார் 80 பழங்குடியின கிராமங்களுக்கு சோதனை அடிப்படையில் அமைக்கப்படும்.
- இது புவியியல் ரீதியாக தொலைதூர மற்றும் கடினமான நிலப்பரப்பைக் கொண்ட இந்த கிராமங்களுக்கு இணைய சேவைகளை கொண்டு வரும்.

## நமோ ட்ரோன் தீதி திட்டம்

- நமோ ட்ரோன் தீதி திட்டத்தின் கீழ் விவசாயம் மற்றும் தொடர்புடைய நோக்கங்களுக்காக ஆளில்லா விமானங்களை இயக்க தேர்வு செய்யப்பட்ட **1,000 பெண்களுக்கு** ட்ரோன்களை பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- இத்திட்டத்தின் கீழ், விவசாய நோக்கங்களுக்காக ட்ரோன் பைலட் ஆக கிராமப்புற பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.
- **குறிக்கோள்** – பெண்கள் மத்தியில், குறிப்பாக கிராமப்புறங்களில் பொருளாதார வலுவூட்டல் மற்றும் நிதி சுயாட்சியை மேம்படுத்துவதாகும்.

## PM–SURAJ போர்ட்டல்

- பிரதான் மந்திரி சமாஜிக் உத்தனேவம் ரோஜ்கர் ஆதாரித் ஜன்கல்யான் (PM–SURAJ) போர்ட்டலை சமீபத்தில் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- சமூகத்தின் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த **தொழில்முனைவோருக்கு கடன் ஆதரவை** வழங்குவதற்காக இந்த போர்ட்டல் தொடங்கப்பட்டுள்ளது.
- சமூகத்தின் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு ஏற்கனவே கிடைக்கும் அனைத்து கடன் மற்றும் கடன் திட்டங்களின் முன்னேற்றத்தையும் கண்காணிக்கும் வகையில் இந்த போர்ட்டல் ஒரு ஒற்றைப் புள்ளியாக இருக்கும்.

## SAKHI செயலி

- SAKHI என்று அழைக்கப்படும் (SAKHI– Space–borne Assistant and Knowledge Hub for Crew Interaction) பல்நோக்கு செயலியை **விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்** (VSSC) உருவாக்கியுள்ளது.
- விண்வெளி வீரர்கள் பூமியுடன் தொடர்பு கொள்ளவும், அவர்களின் உணவு அட்டவணைகள் குறித்து அவர்களுக்கு எச்சரிக்கை செய்யவும் இந்த செயலி உதவும்.
- மனித விண்வெளிப் பயணமான ககன்யான் திட்டத்தை இஸ்ரோ 2025 இல் தொடங்க திட்டமிட்டுள்ளது.

## மின்சார வாகனங்கள் ஊக்குவிப்பு திட்டம் (EMPS), 2024

- சமீபத்தில் கனரக தொழில்துறை அமைச்சகம் (MHI) மின்சார வாகனங்கள் ஊக்குவிப்பு திட்டத்தை (EMPS) செயல்படுத்த முன்மொழிந்துள்ளது.
- மின்சார இரு சக்கர வாகனங்கள் (e2W) மற்றும் மூன்று சக்கர வாகனங்களின்(e3W) பயன்பாட்டை ஊக்குவிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் மின்சார நான்கு சக்கர வாகனங்கள் (e4Ws) மற்றும் மின்–பேருந்துகளை உள்ளடக்காது

## பாஷாநெட் போர்ட்டல்

- பாஷாநெட் இணையதளமானது **மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் / இந்திய தேசிய இணையதள பரிமாற்றம்** ஆகியவற்றால் கூட்டாக தொடங்கப்பட்டது.
- பாஷாநெட் போர்ட்டல் ஒரு பன்மொழி இணையம் மற்றும் உலகளாவிய ஏற்பு முன்முயற்சியாகும்.
- இந்த போர்ட்டல் மொழித் தடையின்றி டிஜிட்டல் ஊடகத்தில் குடிமக்களுக்கு தகவல்களை எளிதாக உருவாக்க, தொடர்புகொள்ள, பரிவர்த்தனை மேற்கொள்ள, செயலாக்க மற்றும் பெறுவதற்கு உதவும் வகையில் ஒரு சூழல் அமைப்பை வழங்குகிறது

## MGNREGS திட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட ஊதியங்கள்

- மத்திய அரசு சமீபத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் திருத்தப்பட்ட ஊதியத்தை அறிவித்துள்ளது. இதன் மூலம் மாநிலங்களில் ஊதியங்கள் 8 முதல் 10% வரை உயர்த்தப்பட்டுள்ளன.
- ஹரியானாவில் ஒரு நாளைக்கு அதிகபட்ச ஊதியம் ₹374 மற்றும் உத்தரபிரதேசத்தில் குறைந்தபட்சமாக ஊதியம் ₹237 வழங்கப் படுகிறது.
- **தமிழ்நாட்டில் ரூ.294ல் இருந்து தற்போது ரூ.319 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.**

## C–Vigil செயலி

- சமீபத்தில் மாதிரி நடத்தை விதிகளை மீறியதற்காக 79,000 புகார்கள் **C–Vigil செயலியின்** மூலம் பெறப்பட்டதாகவும், 99 **சதவீத புகார்களுக்கு** தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- "cVIGIL" செயலி, தேர்தல் நடத்தை விதிகளை மீறுவது குறித்து புகார் அளிக்க குடிமக்களுக்கு உதவுகிறது.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்

### சிறுத்தைகளின் கணக்கெடுப்பு குறித்த அறிக்கை

- **இந்தியாவில் சிறுத்தைகளின் கணக்கெடுப்பு குறித்த அறிக்கையை** மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் **பூபேந்தர் யாதவ்** புதுதில்லியில் வெளியிட்டார்.
- மாநில **வனத்துறையுடன் இணைந்து தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம்** மற்றும் **இந்திய வனவிலங்குகள் நிறுவனம்** சிறுத்தைகள் குறித்த **ஐந்தாவது கணக்கெடுப்பை** நடத்தியது.
- இந்தியாவில் சிறுத்தைகளின் **எண்ணிக்கை 13,874**– ஆகக் கண்டறியப்பட்டுள்ளது.
- அதிகபட்சமாக **மத்தியப் பிரதேசத்தில்** 3907 சிறுத்தைகளும், **மகாராஷ்டிராவில்** 1985 சிறுத்தைகளும், **கர்நாடகாவில்** 1879 சிறுத்தைகளும், **தமிழ்நாட்டில்** 1070 சிறுத்தைகளும் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

### சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் முதல் ஹெர்பெட்டோஃபவுனல் ஆய்வு

- **முதுமலை புலிகள் காப்பகத்தின்** (MTR) மையப் பகுதியில் **முதன்முறையாக ஹெர்பெட்டோஃபவுனல் கணக்கெடுப்பு** நடத்தப்பட்டது.
- **ஹெர்பெட்டோஃபவுனல்** என்பது **நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரினங்கள்** மற்றும் **ஊர்வன** ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது.
- **இந்த** கணக்கெடுப்பு **82 வெவ்வேறு இனங்களை** பதிவு செய்ய வழிவகுத்தது.
- **இதில் 51 வகையான ஊர்வன** மற்றும் **31 வகையான நீரிலும் நிலத்திலும்** வாழக்கூடிய உயிரினங்களும் அடங்கும்

### இந்தியாவின் முதல் டால்பின் ஆராய்ச்சி மையம்

- இந்தியாவின் முதல் டால்பின் ஆராய்ச்சி மையமான **தேசிய டால்பின் ஆராய்ச்சி மையத்தை** (NDRC) பாட்னாவில் பீகார் முதல்வர் நிதிஷ் குமார் திறந்து வைத்தார்.
- இது கங்கை நதிக்கரையில் பாட்னா பல்கலைக்கழக வளாகத்திற்குள் அமைந்துள்ளது.
- இது நன்னீர் டால்பின்களின், குறிப்பாக கங்கையில் காணப்படும் டால்பின்களின் நடத்தையை மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் புரிந்துகொள்ள இது உதவும்.

### பண்டவுலா குட்டா

- சமீபத்தில் **பண்டவுலா குட்டா தெலுங்கானாவின்** ஒரே புவிசார் பாரம்பரிய தளமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இது இமயமலைகளை விட பழமையான புவியியல் அதிசயமாகும் .
- புவிசார் பாரம்பரிய தளங்கள் இந்திய புவியியல் ஆய்வு நிறுவனம் (GSI) மூலம் அறிவிக்கப்படுகின்றன.

### 'வெப்பமான ஆண்டு' பதிவு

- உலக வானிலை அமைப்பு வெளியிட்ட உலக காலநிலை அறிக்கையின்படி **2023ம் ஆண்டு** அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட மிக வெப்பமான ஆண்டாகும்.
- மேற்பரப்புக்கு அருகிலுள்ள உலகளாவிய சராசரி வெப்பநிலையானது தொழிற்புரட்சிக்கு முந்தைய வெப்பநிலையை விட 1.45 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்தது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

## சென்னா ஸ்பெக்டபிலிஸ்

- **அந்நிய மர இனமான சென்னா ஸ்பெக்டபிலிஸ் முதுமலை புலிகள் காப்பகத்தின்** (MTR) சுமார் 400 ஹெக்டேர் பரப்பளவில் அகற்றப்பட்டுள்ளதாக வனத்துறை தெரிவித்துள்ளது.
- **முதுமலை மற்றும் சத்தியமங்கலம் புலிகள் காப்பகங்களில்** இருந்து இந்த மரத்தை அகற்ற **சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.**

குறிப்பு

- **அந்நிய தாவரங்கள்** என்பது சுற்றுச்சூழல் அமைப்புகளை கணிசமாக சீர்குலைக்கும் அவ்விடத்தை பூர்வீகமாகக் கொல்லாத இனங்கள் ஆகும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்



# 4. பொருளாதாரம்

## 4.1 அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### SIPRI அறிக்கை

- ஸ்வீடிஷ் சிந்தனைக் குழுவான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) கருத்துகணிப்பின்படி, 2019–23 காலகட்டத்தில் **இந்தியா ஆயுத இறக்குமதியில் உலகின் முதல் நாடாக இருக்கிறது.**
- இறக்குமதி 2014–18 காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 4.7% ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியாவிற்கு ஆயுதங்களை விநியோகிக்கும் முக்கிய நாடாக ரஷ்யா நீடிக்கிறது.

### மனித வளர்ச்சிக் குறியீடு (HDI) 2023–24

- சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தால் (UNDP) மனித வளர்ச்சி அறிக்கை 2023–2024 வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின் கருப்பொருள் : "Breaking the Gridlock: Reimagining Cooperation in a Polarized World" என்பதாகும்.
- 2022 இல் இந்தியா **134 வது இடத்தில்** உள்ளது.
- இந்தியா மனித வளர்ச்சிக் குறியீட்டில் **நடுத்தர பிரிவில்** உள்ளது.
- 1990 மற்றும் 2022 க்கு இடைப்பட்ட காலத்தில் 1990 இல் 0.434 இல் இருந்து 2022 இல் 644 ஆக HDI மதிப்பு 48.4 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2022 இல் இந்தியாவின் பிறக்கும் போதான வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் 67.7 ஆண்டுகள் ஆகும்.
- சராசரி பள்ளிப்படிப்பின் காலம் (EYS) 12.6 ஆண்டுகள் ஆகும்.8. மொத்த தேசிய வருமானத்தில் (GNI) தனிநபர் வருமானம் $6,951 ஆகும்.

### பாலின சமத்துவமின்மை குறியீடு 2022

- சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தால் (UNDP) பாலின சமத்துவமின்மை குறியீடு 2022 வெளியிடப்பட்டது.
- 193 நாடுகளில் இந்தியா **0.437 மதிப்பெண்களுடன் 108 வது இடத்தில்** உள்ளது.
- 2021 தரவரிசையில் 191 நாடுகளில் 0.490 **மதிப்பெண்களுடன் 122 வது** இருந்த இந்தியா 14 இடங்கள் முன்னேறியுள்ளது.

### ILO அறிக்கை

- "லாபங்களும் வறுமையும்: கட்டாய உழைப்பின் பொருளாதாரம்" என்ற தலைப்பில் சர்வதேச தொழிலாளர் அமைப்பால் (ILO) சமீபத்தில் அறிக்கை வெளியிடப்பட்டது.

#### அறிக்கையின் முக்கிய அம்சங்கள்

- கட்டாய உழைப்பினால் பாதிக்கப்பட்டரின் மூலம் $10,000 என ஆண்டுக்கு $36 பில்லியன் மதிப்புள்ள சட்டவிரோத லாபத்தை உருவாக்குகிறது.
- கட்டாயத் தொழிலாளர்களின் மொத்த வருடாந்திர சட்டவிரோத லாபம் ஐரோப்பாவிலும் மத்திய ஆசியாவிலும் அதைத் தொடர்ந்து ஆசியாவிலும் அதிகமாக உள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

- கட்டாய உழைப்பால் அதிக வருடாந்திர சட்டவிரோத லாபம் பெறும் முதல் மூன்று துறைகள்,
  - கட்டாய வணிக பாலியல் சுரண்டல்.
  - தொழிற்துறை
  - சேவைத்துறை

## காற்று தர அறிக்கை 2023

- சுவிட்சர்லாந்தின் IQAir அமைப்பு சமீபத்தில் காற்று தர அறிக்கை 2023 ஐ வெளியிட்டது.

**முக்கிய கண்டுபிடிப்புகள்:**

- வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானுக்கு அடுத்தபடியாக இந்தியா **மூன்றாவது** அதிக மாசுபட்ட நாடாக உள்ளது .
- உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகரமாக **புது டெல்லி** இடம் பெற்றுள்ளது.
- பீகாரின் பெகுசராய் உலகின் மிகவும் மாசுபட்ட பெருநகரப் பகுதியாக உருவெடுத்துள்ளது.
- உலகின் மிகவும் மாசுபட்ட 50 நகரங்களில் 42 இந்தியாவில் உள்ளன.

## உலக மகிழ்ச்சிக் குறியீடு (WHR) 2024

- உலக மகிழ்ச்சிக் குறியீடானது **ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சித் தீர்வுகளுக்கான வலையமைப்பால்** ஆண்டுதோறும் வெளியிடப் படுகிறது.
- தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஆரோக்கியமான ஆயுட்காலம், ஒருவரை சார்ந்திருத்தல், வாழ்க்கைத் தேர்வுகளைச் செய்வதற்கான சுதந்திரம், தாராள மனப்பான்மை மற்றும் ஊழல் இன்மை ஆகிய ஆறு குறியீடுகளைப் பயன்படுத்தி இந்த குறியீடு கணக்கிடப்படுகிறது.
- இந்த குறியீட்டில் இந்தியா **126வது** இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் முதியவர்கள் அதிக வாழ்க்கை திருப்தியுடன் வாழ்வதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- தொடர்ந்து ஏழாவது ஆண்டாக **பின்லாந்து** முதலிடத்திலும், டென்மார்க், ஐஸ்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன

## ஐநா உலக நீர் மேம்பாட்டு அறிக்கை 2024

- 'வளம் மற்றும் அமைதிக்கான நீர்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு **ஐநா உலக நீர் மேம்பாட்டு அறிக்கை 2024** சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது ஐ.நா–நீர் என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது.
- மொத்த நன்னீரில் **70% விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுவதாக இந்த அறிக்கையில்** தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய வேலைவாய்ப்பு அறிக்கை 2024

- சமீபத்தில் **சர்வதேச தொழிலாளர் அமைப்பு** (ILO) **மற்றும் மனித மேம்பாட்டு நிறுவனத்தால்** (IHD) இந்திய வேலைவாய்ப்பு அறிக்கை 2024 வெளியிடப்பட்டது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- நாட்டின் வேலையற்றவர்களில் கிட்டத்தட்ட 83% பேர் இளைஞர்கள் ஆவர்.
- இந்தியாவில் உள்ள வேலையற்ற இளைஞர்களிடையே இடைநிலை அல்லது உயர்கல்வி பெற்றவர்களின் பங்கு 2000 ஆம் ஆண்டில் 35.2% ஆக இருந்தது 2022 இல் 65.7% ஆக இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- விவசாயத் தொழிலாளர்கள் முக்கியமாக கட்டுமானம் மற்றும் சேவைத் துறை தொழிலாளர்களாக மாறியுள்ளனர்

## உலகளாவிய வர்த்தக புதுப்பிப்பு அறிக்கை

- சமீபத்தில் **ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுச் சங்கத்தால்** (UNCTAD) உலகளாவிய வர்த்தக புதுப்பிப்பு அறிக்கை வெளியிடப்பட்டது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- 2023ல் இந்தியாவில் இருந்து **சேவைகளின் ஏற்றுமதி 14%** அதிகரித்துள்ளது.

- இந்தியாவில் இருந்து பொருட்கள் ஏற்றுமதி 6% குறைந்துள்ளது.
- சர்வதேச வர்த்தகம் 2024 ஆம் ஆண்டில் மீண்டும் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உணவு வீணாக்கக் குறியீட்டு அறிக்கை 2024

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) மற்றும் கழிவு மற்றும் வளங்கள் செயல் திட்டம் (WRAP) ஆகியவற்றால் உணவு வீணாக்கக் குறியீட்டு அறிக்கை 2024 வெளியிடப்பட்டது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- 2022ம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள குடும்பங்கள் ஒரு நாளைக்கு ஒரு பில்லியனுக்கும் அதிகமான உணவை வீணாக்குகின்றன.
- 2022ம் ஆண்டில் 1.05 பில்லியன் டன் உணவுக்கழிவுகள் உருவாக்கப்பட்டன.
- இந்தியாவின் தனிநபர் உணவுக்கழிவு ஆண்டுக்கு 55 கிலோ ஆகும்.
- இக்குறியீட்டில் உள்ள 125 நாடுகளில் **இந்தியா 111வது இடத்தில்** உள்ளது.

## இந்திய காசநோய் அறிக்கை 2024

- சமீபத்தில் **மத்திய சுகாதார அமைச்சகத்தால்** இந்திய காசநோய் அறிக்கை 2024 வெளியிடப்பட்டது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- 2015 முதல், **இந்தியாவில் காசநோய் பாதிப்பு 16% மற்றும் இறப்பு விகிதம் 18% குறைந்துள்ளது.**
- இந்தியாவில் 2022 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 199 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இறப்பு விகிதம் 2022 இல் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 23 ஆகும்.
- காசநோயை ஒழிப்பதற்கான இலக்காக **2025ஐ** இந்தியா நிர்ணயித்துள்ளது.

**குறிப்பு**

- காசநோய் ஒழிப்பை விரைவுபடுத்த தேசிய உத்தி திட்டம் 2017–25 மூலம் **தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் (NTEP)** வழிநடத்தப்படுகிறது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 5. அறிவியல்




## 5.1 விண்வெளி

### அக்னி–5

- உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அக்னி–5 ஏவுகணையின் முதல் சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) **மல்டிபில் இண்டி பெண்டன்ட்லி டார்கெட்டபிள் ரீ–என்ட்ரி வெஹிகிள் (MIRV) தொழில்நுட்பத்துடன்** வெற்றிகரமாக நடத்தியது.
- இது திவ்யாஸ்திரம் திட்டத்தின் கீழ் ஒடிசாவில் உள்ள ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தீவில் இருந்து ஏவப்பட்டது.
- MIRV தொழில்நுட்பம் என்பது ஒரு ஏவுகணை பல போர்க்கப்பல்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது.

### இந்தியாவின் முதல் திரவ ஆக்சிஜன்–மண்ணெண்ணெய் ராக்கெட்

- சென்னையை மையமாகக் கொண்டு இயங்கும் விண்வெளி அடிப்படையிலான ஸ்டார்ட்–அப் நிறுவனமான **அக்னிகுல் காஸ்மோஸ்** என்ற தனியார் நிறுவனம் அதன் முதல் ராக்கெட்டான அக்னிபான் சப் ஆர்பிட்டல் டெக்னாலஜி டெமான்ஸ்ட்ரேட்டரை (SOrT–eD) ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து ஏவியது.
- **அக்னிபான்** SorTeD
  - தனியார் ஏவுதளத்தில் இருந்து ஏவப்பட்ட இந்தியாவின் முதல் ராக்கெட்டாகும்
  - இந்தியாவின் முதல் செமி கிரையோஜெனிக் இன்ஜின் ராக்கெட்டாகும்.
  - உலகின் முதல் 3D அச்சிடப்பட்ட இன்ஜின் மற்றும் உள்நாட்டிலே வடிவமைக்கப்பட்டது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- **இன்–ஸ்பேஸ் நிறுவனத்தின்** முயற்சியின் கீழ் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் (ISRO) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட **நாட்டின் முதல் நிறுவனம்** அக்னிகுல் காஸ்மோஸ் ஆகும்.

### 'புஷ்பக்' மறுபயன்பாட்டு விண்கலம்

- **இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்** (ISRO) RLV LEX 02 தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான புஷ்பக் என்ற மறுபயன்பாட்டு விண்கலத்தின் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- கர்நாடக மாநிலம் **சித்ரதுர்காவில்** உள்ள விண்வெளி அடிப்படையிலான சோதனை ஓடுதளத்தில் (ATR) இந்த சோதனை நடத்தப்பட்டது.
- RLV LEX 02 தரையிறங்கும் சோதனையானது ISRO நடத்திய தொடர் சோதனைகளில் இரண்டாவது முயற்சியாகும்.
- RLV–LEX–01 திட்டம் 2023 இல் தொடங்கப்பட்டது.

### சிவசக்தி தளம்

- சந்திரயான்–3 இன் விக்ரம் லேண்டர் தரையிறங்கிய இடத்திற்கு **"சிவசக்தி"** என்ற பெயரை சர்வதேச வானியல் சங்கம் (IAU) அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது.
- IAU என்பது புதிதாக கண்டுபிடிக்கப்படும் கோள்கள்,இடங்கள் ஆகியவற்றுக்கு பெயர்களை வழங்குவதற்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற அமைப்பாகும்

### POEM–3 திட்டம்

- **துருவ செயற்கைக்கோள் ஏவுவாகன சுற்றுப்பாதை பரிசோதனை தொகுதி–3**

(POEM–3) ஆனது பூமியின் வளிமண்டலத்தில் உள்ள சுற்றுப்பாதையில் எவ்வித விண்வெளி குப்பைகளையும் வெளியிடாமல் மீண்டும் நுழைந்ததாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO)அறிவித்துள்ளது.

- PSLV–C58/XPoSat திட்டம் பூமியின் சுற்றுப்பாதையில் எவ்வித விண்வெளி குப்பைகளையும் வெளியிடாமல் வெற்றிகரமாக செலுத்தப்பட்டுள்ளது.
- POEM–3 ஆனது புதிதாக உருவாக்கப்பட்ட உள்நாட்டு அமைப்புகளில் தொழில்நுட்ப விளக்கங்கள் மற்றும் அறிவியல் சோதனைகளை மேற்கொள்ள மொத்தம் 9 வெவ்வேறு சோதனை பேலோடுகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.

### கலாம்–250

- முன்னணி விண்வெளி–தொழில்நுட்ப நிறுவனமான ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் சமீபத்தில் கலாம்–250 ஏவுதலை வெற்றிகரமாக சோதனை செய்தது.
- கலாம் – 250 என்பது விக்ரம்–1 விண்வெளி ஏவுவாகனத்தின் நிலை –2 ஆகும்.
- ஆந்திரப் பிரதேசத்தில் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் (SDSC) வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது.

குறிப்பு

- விக்ரம் என்பது இந்திய ஸ்டார்ட்அப் ஏரோஸ்பேஸ் நிறுவனமான ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் மூலம் உருவாக்கப்பட்ட ஏவுவாகனங்களின் தொகுப்பாகும்.

## 5.2 சுகாதார அறிவியலில் சமீபத்திய கண்டுபிடிப்புகள்

### கோவிநெட்

- சமீபத்தில், கோவிநெட் என்ற கொரோனா வைரஸ்களுக்கான புதிய நெட்வொர்க்கை **உலக சுகாதார அமைப்பு** (WHO) அறிமுகப்படுத்தியுள்ளது.
- கோவிநெட் என்பது மனித, விலங்கு மற்றும் சுற்றுச்சூழல்கொரோனாவைரஸ்கண்காணிப்பில் நிபுணத்துவம் பெற்ற உலகளாவிய ஆய்வகங்களின் வலையமைப்பாகும்.
- தற்போது, ஆறு WHO பிராந்தியங்களிலும் உள்ள 21 நாடுகளில் இருந்து 36 ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## புவிசார் குறியீடு

- சமீபத்தில் சில பொருட்களுக்கு புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டது, அவை
  - கட்டாக் ரூபா தாரகாசி (வெள்ளி ஃபிலிகிரீ) – ஒடிசா
  - பங்களார் மஸ்லின் – மேற்கு வங்காளம்.
  - நரசாபூர் குக்கீ சரிகை பொருட்கள் – ஆந்திரப் பிரதேசம்
  - கட்ச் ரோகன் கைவினைப் பொருட்கள் – குஜராத்
  - ரத்லம் ரியாவன் லஹ்சுன் (பூண்டு) – மத்திய பிரதேசம்
  - அம்பாஜி வெள்ளை பளிங்கு கற்கள் – குஜராத்
  - திரிபுரா ரிசா ஜவுளிகள் – திரிபுரா
  - ஹைதராபாத் லாக் வளையல்கள் – தெலுங்கானா
  - மஜூலி முகமூடி – அசாம்
  - மஜூலி கையெழுத்துப் பிரதி ஓவியம் – அசாம்

## BSFன் முதல் பெண் ஸ்னைப்பர்

- எல்லைப் பாதுகாப்புப் படையின் (பிஎஸ்எஃப்) தொலை தூரத்திலிருந்து குறி தவறாது சுடும் (ஸ்னைப்பர்) முதல் பெண் என்ற பெருமையை சப் இன்ஸ்பெக்டர் **சுமன் குமாரி** பெற்றுள்ளார்.
- இவர் இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

## இந்தியாவின் முதல் நீருக்கடியிலான மெட்ரோ

- இந்தியாவின் முதல் நீருக்கடியிலான மெட்ரோ ரயில் சேவையை கொல்கத்தாவில் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
- இந்த சேவையானது கொல்கத்தாவின் இரட்டை நகரங்களான ஹவுரா மற்றும் சால்ட் லேக்கை இணைக்கும்.
- இது ஹூக்ளி ஆற்றின் அடியில் 16.6 கிலோமீட்டர் தூரத்திற்கு அமைந்துள்ளது.

## இந்தியாவின் முதல் சிறிய அளவிலான LNG அலகு

- GAIL நிறுவனம் சார்பில் மத்தியப் பிரதேசத்தில் உள்ள விஜயப்பூரில் **இந்தியாவின் முதல் சிறிய அளவிலான இயற்கை எரிவாயு நிறுவனத்தை** மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி சமீபத்தில் திறந்து வைத்தார்.
- 2030ஆம் ஆண்டிற்குள் எரிசக்தி தேவையில் இயற்கை எரிவாயுவின் பங்கை 15% ஆக அதிகரிக்கும் இந்தியாவின் நோக்கத்தை அடைய இது உதவும்.

## இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலை

- துருப்பிடிக்காத எஃகு துறையில் **இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலையை** மத்திய எஃகு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய எம்.சிந்தியா சமீபத்தில் திறந்து வைத்தார்.
- இது ஹரியானாவின் ஹிசாரில் உள்ள ஜிண்டால் ஸ்டெய்ன்லஸ் நிறுவனத்தில் அமைந்துள்ளது.
- இந்த ஆலை இந்தியாவின் நீடித்த எஃகு உற்பத்திக்கு வழி வகுக்கும்.

## இந்தியாவின் முதல் சிவில் விமானப்போக்குவரத்து அமைப்பின் ஆராய்ச்சி மையம்

- ஹைதராபாத் பேகம்பேட் விமான நிலையத்தில் **இந்தியாவின் முதல் சிவில் விமானப்போக்குவரத்து**

வெற்றி I.A.S. கல்வி மையம்

**அமைப்பின் ஆராய்ச்சி மையத்தை** (CARO) மையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

- இது இந்திய விமான நிலைய ஆணையத்தால் தெலுங்கானாவில் அமைக்கப்பட்டது.
- குறிக்கோள் – சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.

## இந்தியாவின் முதல் நகரங்கள் அடிப்படையிலான பூஜ்ஜிய கார்பன் கட்டிட செயல் திட்டம் (ZCBAP)

- இந்தியாவின் முதல் நகரங்கள் அடிப்படையிலான பூஜ்ஜிய கார்பன் கட்டிட செயல் திட்டம் (ZCBAP) **நாக்பூரில்** தொடங்கப்பட்டது.
- இது 2050க்குள் நாக்பூரில் உள்ள அனைத்து கட்டிடங்களையும் நிகர பூஜ்ஜிய கார்பனாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் முதல் கூட்டுறவு அருங்காட்சியகம்

- இந்தியாவின்முதல்கூட்டுறவுஅருங்காட்சியகமான சர்வதேச கூட்டுறவு அருங்காட்சியக கட்டிடம் கேரளாவின் **கோழிக்கோட்டில்** திறக்கப்பட உள்ளது.
- இந்தியாவில் அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 2.3 லட்சம் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 5 கோடி உறுப்பினர்களுடன் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.
- விதி 43B கூட்டுறவு சங்கங்களின் மேம்பாட்டைக் குறிக்கிறது.

## PBSHABD சேவை தொடக்கம்

- மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் சமீபத்தில் 'PB–SHABD' சேவையைத் தொடங்கி வைத்தார்.
- PBSHABD என்பது பிரசார் பாரதி மற்றும் தூர்தர்ஷன் செய்திகள் மற்றும் ஆகாஷ்வாணி செய்திகளின் வலைத்தளங்களின் செய்தி பகிர்வு சேவையாகும்.
- சந்தாதாரர்களுக்கு வீடியோ, ஆடியோ, உரை மற்றும் பிற வடிவங்களில் தினசரி செய்திகளை வழங்க PB–SHABD வடிவமைக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் நடத்தை விதிகள் (MCC)

- மக்களவை தேர்தல் **ஏப்ரல் 19 முதல் ஜூன் 1 வரை ஏழு கட்டங்களாக** நடத்தப்படும் என்றும், ஜூன் 4 ஆம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் இந்திய தேர்தல் ஆணையம் (ECI) அறிவித்தது.
- MCC என்பது தேர்தல்களுக்கு முன்னதாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஒழுங்குபடுத்துவதற்காக வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் தொகுப்பாகும்.
- இவை சட்டப்பூர்வமாக செயல்படுத்த முடியாதவை ஆகும்.
- பொது நடத்தை, கூட்டங்கள், ஊர்வலங்கள், வாக்குப்பதிவு நாள், வாக்குச் சாவடிகள், பார்வையாளர்கள், ஆளுங்கட்சி மற்றும் தேர்தல் அறிக்கைகள் ஆகியவற்றைக் உள்ளடக்கிய எட்டு விதிகள் இதில் உள்ளன.

## சூரியக் கழிவுகள்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) மற்றும் காலநிலை சிந்தனைக் குழுவான ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் கவுன்சில் (CEEW) வெளியிட்ட புதிய ஆய்வின்படி 2030 **ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 600 கிலோ டன் சூரியக் கழிவுகள்** உருவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மார்ச் 2023 நிலவரப்படி இந்தியாவின் தற்போதைய **சூரிய சக்தி உற்பத்தித்திறன் 66.7 ஜிகாவாட்டாக** உள்ளது.

## 'இந்திராவதி' நடவடிக்கை தொடக்கம்

- **ஹைட்டியில்** இருந்து **டொமினிகன் குடியரசிற்கு** இந்தியர்களை மீட்க '**இந்திராவதி** என்ற பெயரில் மீட்பு நடவடிக்கையை இந்தியா தொடங்கியுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

- ஹைட்டியில் உள்நாட்டு அமைதியின்மை காரணமாக பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ளது.

## ராஜஸ்தான் நீர்வள இணையமுகப்பு

- நீருக்காக பிரத்யேக போர்ட்டலைத் தொடங்கிய இந்தியாவின் முதல் மாநிலம் **ராஜஸ்தான்** ஆகும்.
- ராஜஸ்தானின் பல்வேறு பகுதிகளில் உள்ள அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்களில் உள்ள நீர்மட்டம் குறித்த நிகழ்நேர தகவலை இந்த போர்ட்டல் வழங்குகிறது.

## உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியமான காப்பீட்டாளர்கள் (D–SIIs)

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) 2023–24க்கான உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியமான காப்பீட்டாளர்களின் (D–SIIs) பட்டியலை வெளியிட்டுள்ளது.
- **இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம்** (LIC), **இந்திய பொதுக்காப்பீட்டு கழகம்** (GIC Re) **மற்றும் புதிய இந்தியா காப்பீட்டு கழகம்** ஆகியவை உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியமான காப்பீட்டாளர்களாக (D–SIIs) அடையாளம் காணப்பட்டன.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 7 சர்வதேச நிகழ்வு



## பாகிஸ்தானின் புதிய அதிபர்

- சமீபத்தில் பாகிஸ்தானின் 14வது அதிபராக **ஆசிப் அலி சர்தாரி** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இதன் மூலம் இவர் இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாகிஸ்தானின் ஒரே அதிபர் ஆனார்.
- இவர் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர்களில் ஒருவராவார்.

## நேட்டோவின் 32வது உறுப்பினர்

- சமீபத்தில், ஸ்வீடன் அதிகாரப்பூர்வமாக வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (நேட்டோ) 32 **வது உறுப்பினராக** மாறியுள்ளது.
- நேட்டோ என்பது **வடக்கு அட்லாண்டிக் உடன்படிக்கை (வாஷிங்டன் ஒப்பந்தம்), 1949** மூலம் நிறுவப்பட்ட அட்லாண்டிக் அரசியல் மற்றும் இராணுவக் கூட்டணியாகும்.
- தலைமையகம்: **பிரஸ்ஸல்ஸ், பெல்ஜியம்.**

## ரஷ்ய அதிபர்

- 87.8% வாக்குகளைப் பெற்று ரஷ்யாவின் அதிபராக மீண்டும் **விளாடிமிர் புதின்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- அவர் முதன் முதலில் டிசம்பர் 31, 1999 இல் ரஷ்யாவின் அதிபரானார்.

## உலகின் முதல் அணுசக்தி உச்சி மாநாடு

- **உலகின் முதல் அணுசக்தி உச்சி மாநாடு** சமீபத்தில் பெல்ஜியத்தில் உள்ள பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றது.
- **சர்வதேச அணுசக்தி முகமை** (IAEA) மற்றும் **பெல்ஜியம் அரசாங்கத்தால் கூட்டாக** இந்த உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.
- உச்சி மாநாட்டில் இந்தியா உட்பட 30க்கும் மேற்பட்ட நாடுகள் கலந்து கொண்டன.

IAEA பற்றி

- உருவாக்கம் – 1957
- **இது ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.**
- உறுப்பினர்கள் – 178 (இந்தியா உட்பட)

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 8 தமிழ்நாடு



## நம்மாழ்வார் விருது 2024

- இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டு அதை ஊக்குவித்ததற்காக மூன்று விவசாயிகளுக்கு 2023–24 ஆம் ஆண்டிற்கான நம்மாழ்வார் விருதுகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
- 2.50 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் கொண்ட முதல் பரிசை தஞ்சாவூரைச் சேர்ந்த **கோ. சித்தர்** பெற்றுள்ளார்.
- அவரைத் தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த **கே.வி.பழனிசாமி** மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த **கே.எழிலன்** ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் பரிசை பெற்றனர்.

## தோழி விடுதிகள்

- சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறையானது அதன் கீழ் செயல்படும் 10 தங்கும் விடுதிகளை, பணிபுரியும் பெண்களுக்கான **தோழி விடுதிகளுக்கு** இணையாக வசதிகளுடன் சீரமைக்க முன்மொழிந்துள்ளது.
- மொத்தம் 21 பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளை அரசு நடத்துகிறது.
- இவை 1980 இல் அமைக்கப்பட்டன.
- அவற்றில் 10 விடுதிகள் ஏற்கனவே தோழி விடுதிகளாக ஒன்பது இடங்களில் மாற்றப்பட்டுள்ளன.

## ஈனுலையின் கோர் லோடிங் தொடக்கம்

- கல்பாக்கத்தில் உள்ள அணுசக்தி வளாகத்தில் இந்தியாவின் 500 மெகாவாட் திறன் கொண்ட உள்நாட்டு **விரைவு பெருக்கி உலை (PFBR) திட்டத்தை** பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- உள்நாட்டு முன்மாதிரி வேக ஈனுலையின் கோர் லோடிங்' பணியை பாவினி (பாரதிய நபிகியாவித்யுத் நிகம் லிமிடெட்) நிறுவனம் உருவாக்கியுள்ளது.

## புதிய திட்டங்கள் தொடக்கம்

- சமீபத்தில் தமிழக அரசு இரண்டு புதிய திட்டங்களை தொடங்கியது.
- **நீங்கள் நலமா திட்டம்:**
  - இத்திட்டம் மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களை முறையாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக தொடங்கப்பட்டது.
  - இத்திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் பல்வேறு திட்டங்கள் மற்றும் சேவைகளை மேலும் மேம்படுத்துவதற்காக முதல்வர், அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் பயனாளிகளுடன் தொலைபேசி அழைப்புகள் மூலம் அவர்களின் கருத்துக்களைப் பெறுவார்கள்.
- **இணையவழியில் நத்தம் பட்டா மாறுதல் திட்டம்:**
  - கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் கிராம நத்தம் பகுதிகளுக்கு பட்டா பெறுவதில் உள்ள சவால்களை எளிதாக்க இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

## அத்திப்பட்டில் அனல் மின் நிலையம் திறப்பு

- திருவள்ளூர் மாவட்டம் அத்திப்பட்டில் ₹10,158 கோடி மதிப்பிலான **வடசென்னை மிக**

வெற்றி I.A.S. கல்வி மையம்

உய்ய தொழில்நுட்ப (supercritical technology) **அடிப்படையிலான அனல் மின் நிலையம்–3ஐ** முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

- இந்த மின் நிலையம் 800 மெகாவாட் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.
- இந்த மின் நிலையத்திற்கு 2010ல் அப்போதைய முதல்வர் மு. கருணாநிதி அடிக்கல் நாட்டினார்.

## TIDCO மற்றும் IN–SPAce இடையே ஒப்பந்தம்

- **தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமானது** (TID–CO) IN–SPAce உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது.
- IN–SPAce என்பது இந்தியாவில் உள்ள அரசு சாரா நிறுவனங்களின் (NGE) அனைத்து விண்வெளித் துறை நடவடிக்கைகளுக்கான ஒற்றைச் சாளர முகமை நிறுவனமாகும்.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு விண்வெளி தொழில்துறை மற்றும் உந்துசக்தி பூங்கா மற்றும் ஒரு சிறப்பு மையத்தை (CoE) நிறுவ திட்டமிட்டுள்ளது.

## HPV தடுப்பூசி திட்டம்

- விழுப்புரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள **அடையாறு புற்றுநோய் நிறுவன கண்காணிப்பு மையத்தில் HPV தடுப்பூசி** திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் சமீபத்தில் தொடங்கி வைத்தார்.
- இதன்மூலம் விழுப்புரம் மாவட்டத்தில் **9–14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு** கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான இலவச தடுப்பூசி வழங்கப்படும்.
- தமிழகத்தில் இதுபோன்ற திட்டம் செயல் படுத்தப்படுவது **இதுவே முதல் முறையாகும்**.
- தடுப்பூசியின் இரண்டு தவணை பயனாளிகளுக்கு வழங்கப்படும்.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் முக்கியமாக மனித பாப்பிலோமா வைரஸால் (HPV) ஏற்படுகிறது.

## வட சென்னை வளர்ச்சி திட்டம்

- **வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் மூலம்** வடசென்னையின் பல்வேறு பகுதிகளில் 87 வீட்டு வசதி உள்கட்டமைப்பு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- வடசென்னையில் உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்த மாநில அரசு ₹4,181 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.
- வட சென்னை வளர்ச்சி திட்டமானது 2022–23 **தமிழக பட்ஜெட்டில்** அறிவிக்கப்பட்டது.

## கடல்சார் உயர் இலக்கு படை

- தமிழ்நாடு வனத்துறை **கடல்சார் உயர் இலக்கு படை** என்ற சிறப்புப் பிரிவைத் தொடங்கியுள்ளது.
- பாக் விரிகுடாவின் **மன்னார் வளைகுடாவில்** உள்ள கடல் வளங்கள் சுரண்டப்படுவதற்கு எதிராக சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தில் உள்ள பவளப்பாறைகள், கடல் புல் மற்றும் பிற கடல் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை பாதுகாப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## புதுமைப் பெண் திட்டம்

- அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் படிக்கும் மாணவிகளுக்கு **புதுமைப் பெண் திட்டத்தின் வரம்பை நீட்டித்து** சமூக நலத்துறை அரசு ஆணை வெளியிட்டுள்ளது.
- இதன் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் படிக்கும் **49,600க்கும்** மேற்பட்ட மாணவிகள் கூடுதலாக பயனடைவார்கள்.
- புதுமைப் பெண் திட்டம் **செப்டம்பர் 5, 2022** அன்று தொடங்கப்பட்டது.

## மக்களை தேடி மருத்துவம் (MTM)

- **மக்களைத் தேடி மருத்துவம்** திட்டத்தின் மூலம் (MTM) கிராமப்புறங்களில் உள்ள பெண்கள், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் போன்ற மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் பயன் அடைந்துள்ளதாக மாநிலம் தழுவிய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- இத்திட்டத்தின் கீழ் **தொற்று அல்லாத நோய்களான** (NCDs) நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றுக்கான பரிசோதனை அதிகமாகவும் புற்றுநோய் பரிசோதனை மிகவும் குறைவாக இருப்பதாகவும் இக்கணக்கெடுப்பு கண்டறிந்துள்ளது.
- **மக்களைத் தேடி மருத்துவம் (MTM) திட்டம் 2021ல்** தொடங்கப்பட்டது.
- **நோக்கம்** – மருத்துவ சேவையை மக்களின் வீட்டு வாசலுக்கே கொண்டு சேர்ப்பதாகும்.

## முத்தமிழ் முருகன் மாநாட்டுக்கான ஒருங்கிணைப்புக்குழு

- அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டுக்கான 20 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவை இந்து சமய அறநிலையத்துறை அமைத்துள்ளது.
- இக்குழுவிற்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை தாங்குகிறார்.
- இந்த மாநாடு பழனியில் நடைபெற உள்ளது.

## நான்கு புதிய மாநகராட்சிகள்

- **புதுக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை, காரைக்குடி** ஆகிய நகரங்களை மாநகராட்சிகளாக தரம் உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ன் கீழ் வகுக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க புதிய மாநகராட்சிகள் நிறுவப்படும்.

## இரண்டாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

- இரண்டாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு **2025ம் ஆண்டு ஜூன் மாதம்** ஐந்து நாட்கள் சென்னையில் நடைபெறும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- முதல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 ஜூன் மாதம் கோவையில் அப்போதைய முதல்வர் மு.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.

## PM SHRI பள்ளிகள் திட்டம்

- தமிழகத்தில் PM SHRI திட்டத்தை செயல்படுத்த மத்திய கல்வி அமைச்சகத்துடன் **புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்** (MoU) கையெழுத்திட தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.
- **இது 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையை** அமலாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டம் 2022–23 முதல் 2026–27 வரையிலான **5 ஆண்டுகளில்** செயல்படுத்தப்படும்.

## 'முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம்' (MGSMT)

- சமீபத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் சாலைகளை மேம்படுத்த தமிழக அரசு ₹1,000 கோடியை ஒதுக்கியுள்ளது.
- இந்தத் திட்டம் தொலைதூர கிராமங்களுக்கு தரமான சாலைகளின் வலையமைப்பை 2,000 கி.மீ வரை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## புலிகுத்திப்பட்டான் நடுகல்

- திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அருகே **விஜயநகரப் பேரரசு காலத்தைச் சேர்ந்த புலிகுத்திப்பட்டான் நடுகல்** அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புப் பகுதிகளில் இருந்து புலிகளை துரத்தும் போது உயிர் தியாகம் செய்தவர்களின் நினைவாக இது அமைக்கப்பட்டுள்ளது

## கடன் வாங்குவதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது

- தரவரிசை நிறுவனமான ICRA வெளியிட்ட தரவுகளின் படி, தொடர்ந்து நான்காவது நிதியாண்டில் **அதிக கடன் வாங்கும் மாநிலமாக** தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.
- **2023–24 நிதியாண்டின் இறுதியில் தமிழ்நாடு ₹1,13,000 கோடி கடன்** வாங்கியுள்ளது.
- கடன் வாங்குவதில் தமிழ்நாட்டைத் தொடர்ந்து **மகாராஷ்டிரா** மற்றும் **உத்தரப் பிரதேசம்** உள்ளன

வெற்றி I.A.S. கல்வி மையம்